1984 மார்ச் 27]

கும்பகோணம் புகைவண்டி மேம்பாலம் அருகிலுள்ள தோல்பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவுநீர்.

478—(*வினா எண் 21573) திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் புகைவண்டி மேம்பாலம் அருகில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீர் அருகில் உள்ள குளத்தில் கலந்து விடுவதால், பொது மக்களுக்குப் பல வியாதிகள் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இத்தோல் தொழிற்சாலை இடமாற்றம் செய்து கொள்ள அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) கும்பகோணம் புகைவண்டி மேம்பாலம் அருகில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இல்லை. ஆனால் தோல் சேமிப்பு மற்றும் விற்பனைக் கிடங்குகள் மூன்று உள்ளன.

(ஆ) இந்தத் தோல் சேமிப்பு கிடங்குகளை நகர எல்லைக்கு வெளியே இடமாற்றம் செய்ய எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் பரிசீலனையிலுள்ளது.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் அதைச் சேமித்து வைக்கின்ற கிடங்குகள் அங்கே இருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் அங்கே தோல்கள் எல்லாம் கழுவப்பட்டு, அதனுடைய நீர் அருகாமையில் உள்ள அந்தக் குளத்தில் தற்போது கலந்து கொண்டிருக்கின்றன. அங்கே குடியிருப்பவர்களுக்கு, அந்தக் குளம்தான் குளிப்பதற்கும், மற்றும் உள்ள உபயோகங்களுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து உடனடியாக அந்தச் சேமிப்புக் கிடங்கை இடமாற்றம் செய்ய ஆவன செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 27

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த இடத்திலே தொழிற்சாலைகள் இல்லாவிட்டாலும், சேக்தாவுத் அன்ட் சன்ஸ், ஜமால் முகமது அன்ட் சன்ஸ் என்ற இரண்டு கிடங்குகளில் தோல் சேமித்து வைக்கப்படுகின்றன. இதைத் தவிரவும் எலும்புகள் மற்றும் மாட்டுக்கொம்புகள் சேமித்து வைக்கப்படுகின்றன. இந்த எலும்புகளின் கழிவு நீர் சுத்திகரிப்பு எதுவுமின்றி அருகாமையில் தேங்கி குட்டையை அடைகிறது. மேற்கண்ட கிடங்கு, குடியிருப்புப் பகுதிகளுக்கு அருகாமையில் அமைந்துள்ளதாலும் தோல் மற்றும், எலும்புகளை ஒட்டியுள்ள அங்கப்பொருட்கள் விற்பனைக்காக சேமித்து வைப்பதால், அழுகி துர்நாற்றம் வீசுவதாலும் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப் போதுமான இடங்கள் இல்லாததாலும், இந்தக் கிடங்குகளை நகர எல்லைக்கு வெளியே இட மாற்றம் செய்ய நகர ஆணையருக்குப் பரிந்துரை செய்வது சம்பந்தமாக வாரியம் தொடர்ந்து பரிசீலனை செய்யும்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடமாற்றம் செய்வதற்கு நோட்டீஸ் ஏதாவது முனிசிபாலிட்டி மூலமாக கொடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி என்றால் எந்தத் தேதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது சம்பந்தப்பட்ட குறிப்புகள் என்னிடம் இல்லை. வாரியம் கண்டிப்பாக, நகர ஆணையருக்கு பரிந்துரை செய்து தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும்.

அரசு ஊழியர்கள் வீடுகட்ட வாங்கும் கடன் தொகையின் உச்சவரம்பை அதிகரிக்கும் திட்டம்.

479—(*வினா எண் 12571) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள் வீடுகட்ட வாங்கும் கடன் உதவியின் உச்சவரம்பை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?